# கள்ளர் சீரமைப்பு பள்ளிகள் இணைப்பை கைவிட வலியுறுத்தல்

மதுரை,ஜூன்.29

நீதியரசர்சந்துருஒருநபர் அறிக்கையின் கருத்துருக்கு பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்து வரும் சூழ்நிலையில் மதுரை மாவட்ட ஊராட்சி அலுவலக கூட்டம் தலைவர் சூரியகலா கலாநிதி தலைமையில் நடைபெற்றது கூட்டத்தில் கள்ளர் பள்ளிகளை பள்ளிக்கல்வித்துறை யின் கீழ் இணைத்திட கூடாது என்ற கருத்துருவை வலியுறுத்தி அனைத்து தரப்பு கவுன்சிலர்களும் தீர்மானம் நிறைவேற்றி மாவட்ட ஊராட்சி தலைவர் சூரியகலா கலாநிதியிடம் அளித்தனர்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் மாவட்ட கவுன்சிலர் ரெட்காசி, கள்ளர் சீரமைப்புதுறையின் கீழ் செயல்பட்டு வரும் கள்ளர் பள்ளிகள் மற்றும் ஆதிதிராவிட நல பள்ளிகள்,இந்து அறநிலையத்துறை பள்ளிகள், வனத்துறை பள்ளிகள் ஆகிய பள்ளிகளை பள்ளி கல்வித் துறையோடு இணைக்க வேண்டும் என்று ஓய்வு பெற்ற நீதிபதி சந்துரு *(One Man Committee)* வின் அறிக்கை யை தமிழக அரசு நிராகரித்து வழக்கம் போல் மேற்படி பள்ளிகள் ,அந்தந்த பெயரில் செயல் படும் என்று அறிக்கையில் வாயிலாக அறிவிப்பு ஆணை வெளியிட வேண்டும் என்ற சிறப்புத் தீர்மானத்தை மாமன்றத்தின் முன்பு கொண்டு வந்ததன் அடிப்படையில் தீர்மானத்திற்கு மாவட்ட ஊராட்சி தலைவரும், துணைத் தலைவரும், அனைத்து மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்களும், முழு ஆதரவு தந்து மேற்படி சிறப்பு தீர்மானத்தை கட்சி பாகுபாடு இன்றி அனைத்து கவுன்சிலர்களும் ஆதரித்து மாவட்ட ஊராட்சி தலைவரிடம் தீர்மான நகலாக வழங்கினார்கள்.

கூட்டத்தில் துணைத் தலைவர் செல்லம்பட்டி முத்துராமன், மாவட்ட கவுன்சிலர்கள் நேருபாண்டியன், ரெட்காசி, பன்னிக் குண்டு ஜெயராஜ், நாகமலை புதுக்கோட்டை ஜெயக்குமார், கிருத்திகா தங்கபாண்டியன் மற்றும் சுதாகர் உள்ளிட்ட கவுன்சிலர்கள் உள்ளனர்.

---

புதுச்சேரி மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் (PDM), புதுச்சேரி

O.S. No.593 / 2024

1. சுந்தரி
2. சுமதி (Insane)
3. சிவக்குமார்
4. ரேவதி –வாதிகள்

-Vs-

ஜெயக்குமார் –பிரதிவாதி

பொது அறிவிப்பு

மேற்கண்ட கனம் நீதிமன்றத்தில் வாதிகள் வாரிசு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். முதல் வாதியின் கணவரும், இரண்டு மூன்று மற்றும் நான்காம் வாதிகளின் தந்தையார் பெருமாள், த/பெ. ராமானுஜம் கடந்த 26.4.2017–ல் அரசு பொது மருத்துவமனை புதுச்சேரியில் இறந்துவிட்டார். அவருக்கு வாதிகள் சட்டப்பூர்வமான வாரிசுகள் என கோரிய வழக்கு வருகின்ற 22.7.2024–ல் காலை 10.00 மணிக்கு கனம் நீதிமன்றத்தில் ஆட்சேபனைக்கு வைக்கப் பட்டுள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் ஆஜராகி தெரிவிக்கவும். தவறும்பட்சத்தில் வாதிகள் கோரியபடி தீர்ப்பாகும் என்பதனை இதன் மூலம் அறியவும்.

P. தாமோதரன், LL.B.,
G. சுதா, B.A., LL.B.,
I. சதிஷ்குமார், B.A., LL.B.,
வழக்கறிஞர்கள், புதுச்சேரி.

---

**சிறப்பு சார்பு நீதிமன்றம் தஞ்சாவூர்**

**M.COP. No. 785/2023**

K. விக்னேஷ்
த/பெ கேசவராஜ்
எண்: 343, ஆதிதிராவிடர் தெரு,மாப்பிள்ளைநாயக்கன்பட்டி,
ராவுசாப்பட்டி (போஸ்ட்)
தஞ்சாவூர் தாலுக்கா,
தஞ்சாவூர் மாவட்டம் …மனுதாரர்

எதிர்

பானுப்பிரியர்
த/பெ குமார்
எண்: 46, கோட்டைக்குளம்,
கீழமேடு, பட்டுக்கோட்டை
வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் … எதிர்மனுதாரர்

**மனுதாரர் தரப்பில் தரும் அறிவிப்பு**

மேற்படி வழக்கில் மனுதாரர் வாகன விபத்தில் அடிப்பட்டதற்காக மேற்படி மனுதாரர் தங்களிடமிருந்து இழப்பீட்டு கேட்டு தங்களுக்கு எதிராக தஞ்சாவூர் சிறப்பு சார்பு நீதிமன்றத்தில் MCOP.No. 785/2023 என்ற நம்பரில் வழக்கு தாக்கல் செய்து எதிர்மனு தாரராகிய தங்களுக்கு பல தடவை நீதிமன்றம் மற்றும் பதிவுத்தபால் மூலம் அறிவிப்பு அனுப்பி சார்வ் ஆகாத காரணத்தினால் இறுதியாக நாளிதழில் விளம்பரம் செய்ய உத்தரவாகி அதன் பேரில் வழக்கானது வருகிற **12.07.2024** அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அதில் எதிர் மனுதாராகிய தங்களுக்கு ஏதாவது ஆட்சேபனை இருப்பின் சமூகம் கோர்ட்டில் மேற்படி தேதியில் காலை 10.30 மணிக்கு நேரடியாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தெரி வித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் வழக்கு ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இந்த அறிவிப்பின் மூலம் அறியவும்.

C. **முத்துக்குமார்.,** B.CA., LLB.,
**வழக்கறிஞர், தஞ்சாவூர்**

---

**சிறப்பு சார்பு நீதிமன்றம் தஞ்சாவூர்**

**M.COP. No. 805/2023**

தனபால்
த/பெ சைவராஜ்
எண்: 485, தெற்கு தெரு,
கீழபுனவாசல்,
திருவையாறு வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம் …மனுதாரர்

எதிர்

பிரவீன்
த/பெ மணிவண்ணன்
எண்: B-203 2-வது தளம்,
ராஜகாம் சில்வர் க்ரெஸ்டில்
அறிவாலையம், மதுரப்பாக்கம்
சென்னை-600 127 …. எதிர்மனுதாரர்

**மனுதாரர் தரப்பில் தரும் அறிவிப்பு**

மேற்படி வழக்கில் மனுதாரர் வாகன விபத்தில் அடிப்பட்டதற்காக மேற்படி மனுதாரர் தங்களிடமிருந்து இழப்பீட்டு கேட்டு தங்களுக்கு எதிராக தஞ்சாவூர் சிறப்பு சார்பு நீதிமன்றத்தில் MCOP.No. 805/2023 என்ற நம்பரில் வழக்கு தாக்கல் செய்து எதிர்மனு தாரராகிய தங்களுக்கு பல தடவை நீதிமன்றம் மற்றும் பதிவுத்தபால் மூலம் அறிவிப்பு அனுப்பி சார்வ் ஆகாத காரணத்தினால் இறுதியாக நாளிதழில் விளம்பரம் செய்ய உத்தரவாகி அதன் பேரில் வழக்கானது வருகிற **04.07.2024** அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அதில் எதிர் மனுதாராகிய தங்களுக்கு ஏதாவது ஆட்சேபனை இருப்பின் சமூகம் கோர்ட்டில் மேற்படி தேதியில் காலை 10.30 மணிக்கு நேரடியாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தெரி வித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் வழக்கு ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இந்த அறிவிப்பின் மூலம் அறியவும்.

AG. **சரவணன்.,** B.Sc., B.L.,
**வழக்கறிஞர், தஞ்சாவூர்**

---

**சிறப்பு சார்பு நீதிமன்றம் தஞ்சாவூர்**

**M.COP. No. 764/2023**

V. ஹானஸ்ட்ராஜ்
த/பெ வின்செண்ட்
எண்: 354, அரிச்சன தெரு,
மாப்பிள்ளை நாயக்கன்பட்டி,
ராவுசாப்பட்டி (போஸ்ட்)
தஞ்சாவூர் தாலுக்கா,
தஞ்சாவூர் மாவட்டம் …மனுதாரர்

எதிர்

பானுப்பிரியர்
த/பெ குமார்
எண்: 46, கோட்டைக்குளம்,
கீழமேடு, பட்டுக்கோட்டை
வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் …1-வது எதிர்மனுதாரர்

**மனுதாரர் தரப்பில் தரும் அறிவிப்பு**

மேற்படி வழக்கில் மனுதாரர் வாகன விபத்தில் அடிப்பட்டதற்காக மேற்படி மனுதாரர் தங்களிடமிருந்து இழப்பீட்டு கேட்டு தங்களுக்கு எதிராக தஞ்சாவூர் சிறப்பு சார்பு நீதிமன்றத்தில் MCOP.No. 764/2023 என்ற நம்பரில் வழக்கு தாக்கல் செய்து எதிர்மனு தாரராகிய தங்களுக்கு பல தடவை நீதிமன்றம் மற்றும் பதிவுத்தபால் மூலம் அறிவிப்பு அனுப்பி சார்வ் ஆகாத காரணத்தினால் இறுதியாக நாளிதழில் விளம்பரம் செய்ய உத்தரவாகி அதன் பேரில் வழக்கானது வருகிற **04.07.2024** அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அதில் எதிர் மனுதாராகிய தங்களுக்கு ஏதாவது ஆட்சேபனை இருப்பின் சமூகம் கோர்ட்டில் மேற்படி தேதியில் காலை 10.30 மணிக்கு நேரடியாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தெரி வித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் வழக்கு ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இந்த அறிவிப்பின் மூலம் அறியவும்.

AG. **சரவணன்.,** B.Sc., B.L.,
**வழக்கறிஞர், தஞ்சாவூர்**

---

**IndoStar Home Finance Private Limited**
Regd. Office: - Unit No. 305, 3rd Floor, Wing 2/E, Corporate Avenue, Andheri- Ghatkopar Link Road, Chakala, Andheri (East), Mumbai – 400093
CIN : U65990MH2016PTC271587 Tel: +91 22 45107701
Email: connect@indostarhfc.com; Website: www.indostarhfc.com

**கோரிஜெண்டம்**

இது - நாமக்கல் (தமிழ்நாடு) என்ற இடத்தில் உள்ள அலுவலகத்தை மாற்றுவது மற்றும் அதற்கான செய்தித்தாள் வெளியீடு 14 ஜூன், 2024 அன்று சதர்ன் மெயில் (சென்னை) மற்றும் தினக்குரல் (கடலூர்) பதிப்பில் வெளியிடப்பட்டது. அலுவலகம் மூடப்படும் தேதியானது செப்டம்பர் 12, 2024க்குப் பதிலாக செப்டம்பர் 16, 2024 எனப் படிக்கப்பட வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும். மேற்கூறிய வெளியீட்டின் மற்ற அனைத்து உள்ளடக்கங்களும் மாறாமல் இருக்கும்.

---

*75.விக்கிரவாண்டி சட்டமன்றதொகுதி இடைத்தேர்தல் முன்னிட்டு, விழுப்புரம் மாவட்டம், முண்டியம்பாக்கம் ஊராட்சியில், வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு தேவையான வாக்காளர் தகவல் சீட்டினை (Voter Information Slip) மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சி.பழனி,வாக்காளரின் இல்லத்திற்கு நேரில் சென்று வழங்கி, பணியினை ஆய்வு செய்தார். உடன் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.மு.சந்திரசேகர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) தமிழரசன், தனி வட்டாட்சியர் (தேர்தல்) கணேசன் உட்பட பலர் உள்ளனர்.*

---

# தேனியில் மின் ஊழியர் மத்திய அமைப்பு சார்பில் 11அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்பாட்டம்

தேனி,ஜூன்.29

தேனியில் மின்ஊழியர் மத்திய அமைப்பு சார்பில் 11அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மேற்பார்வை மின்பொறியாளர் அலுவலகம் முன்பு தேனி கிளைசெயலாளர் தேவராஜ் தலைமையில் ஆர்பாட்டம் நடைபெற்றது.

சி.ஐ.டி.யூ. மாநில துணைத்தலைவர் இராமச்சந்திரன் கோரிக்கை விளக்கவுரையாற்றினார்.கோரிக்கையில் காலிப்பணியிடங்களை நிரப்பிடவும், அரசாணை 100-ஐ முத்தரப்பு ஒப்பந்தத்தில் உள்ள அநீதிகளை கலைந்து அரசு உத்தரவாதத்துடன் கூடிய புதிய ஒப்பந்தத்தை ஏற்படுத்தவும், மின்வாரியத்தை பல கூறுகளாக பிரித்து தனியார் மயபடுத்தும்நடவடிக்கையை கைவிட கோரியும், பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய பணப்பலன்களை வழங்கிட காலதாமதம் செய்யாமல் விரைந்து வழங்கிடவும், கேங்மேன் ஊர்மாற்றம் கள உதவியாளர் பணிமாற்றம் பெற்றிடவும், உள்முக தேர்விற்கு நிர்ணயிக்கப்பட்ட குருமதேதியை கைவிடவும் போன்ற 11 கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்பாட்டம் செய்தனர்.

இந்நிகழ்வில் சி.ஐ.டி.யூ. தேனி மாவட்ட செயலாளர் எம். இராமசந்திரன், மாநில செயற்குழு உறுப்பினர் வளர்மதி, பெரியகுளம் கோட்டப்பொறியாளர் முத்துக்குமார் , மற்றும் நிர்வாகிகள், தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பினர் பலர் கலந்து கொண்டனர்.

---

சிவகங்கை மாவட்டம்

# ”பயிலும் பள்ளியிலேயே ஆதார் பதிவு” திட்டத்தின் கீழ் பயன்பெற்று வரும் மாணாக்கர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்தனர்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாணாக்கர்கள் தரமான கல்வி பெற வேண்டும் என்ற உயரிய நோக்கில் எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தி வருகிறார்கள்.

தற்போதைய நவீன காலத்திற்கேற்ப பாடத்திட்டங்களை விரிவு படுத்தப் பட்டுள்ளதால், அறிவுப்போட்டியை ஈடு செய்கின்ற வகையில் மாணாக்கர்கள் அறிவுக்கூர்மையுடன் பயில வேண்டிய சூழ்நிலை உள்ளது. எதிர்கால தலைமுறையினர் ஆக்கபூர்வம் நிறைந்தவர்களாக உருவாக்குவதற்கான திட்டங்களை தொலைநோக்கு பார்வையுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

மேலும், மாணாக்கர்கள் தங்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கக்கூடிய கல்வியை, நல்லமுறையில் கற்று தங்களது வாழ்வினைவளமானதாகஉருவெடுப்பதற்கு தங்களை தயார்ப்படுத்திக்கொள்ளவதற்கு ஏதுவாகவும், மாணவர்களுடைய பெற்றோர்களின் பொருளாதார சுமையையும் குறைத்து, பெற்றோர்களின் நிலையிலிருந்து தேவையான அனைத்தையும் செய்வதற்கு ஏதுவாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திட்டங்கள் அடிப்படையாக அமைகிறது. மாணாக்கர்களுக்கு அறிவுக் கூர்மை ஏற்படுத்துவது மட்டுமின்றி, ஆரோக்கியமான உடல் நலத்தையும் அளிப்பதற்காக சத்தான உணவுகளையும் வழங்குவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழிவகை ஏற்படுத்தி தந்துள்ளார்கள்.

மேலும், விலையில்லா பாடநூல்கள், சீருடை, காலணி, புத்தகப்பை, கிரையான்ஸ், வண்ணப் பென்சில்கள், கணித உபகரணப்பெட்டி, புவியியல் வரைபட புத்தனம், கம்பளிச் சட்டை, மழைக்கால ஆடை, உறைக் காலணி, காலுறைகள், பேருந்து பயண அட்டை மற்றும் மிதிவண்டிகள் போன்ற விலையில்லா நலத்திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் மாணாக்கர்களின் தேவைகள் முழுமையாக நிறைவு செய்யப்படுகின்றன. மாணவர்களுக்கு அளிக்கப் படும் நலத்திட்டங்கள் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக அனுப்புவதற்கு ஆதார் எண் அவசியமாகிறது.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் அனைவருக்கும் ஆதார் அட்டையை வழங்கிடுவது அவசியமாகும். குறிப்பாக, 1-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து நிலை மாணவர்களும் இடைநிற்றலின்றி தொடர்ந்து கல்வி பயில ஏதுவாக, உதவித் தொகைகள் மற்றும் ஊக்கத் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வுதவி மற்றும் ஊக்கத் தொகை அனைத்தும், மாணவ/மாணவியர்களுக்கு குறித்த நேரத்தில் முறையாக சென்று சேருவதை உறுதி செய்யும் விதமாக, நேரடி பயனாளர் பரிமாற்றம் (DBT) மூலம் பயனாளர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்திடும் முறை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், ”பயிலும் பள்ளியிலேயே ஆதார் பதிவு” என்ற சிறப்பு முன்னேடுப்பின் கீழ், அனைத்து அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் அப்பள்ளியிலேயே ஆதார் எண் பெறுவதற்கு புதிய பதிவுகள் மற்றும் ஆதார் எண் புதுப்பித்தல் தொடர்பான பணிகளை தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் (ELCOT) வாயிலாக இப்பணிகளை மேற்கொள்ள அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

”பயிலும் பள்ளியிலேயே ஆதார் பதிவு” திட்டத்தின் கீழ் பயன்பெற்ற மானாமதுரை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த மாணவி செல்வி ம.பிரியதர்ஷினி அவர்கள் தெரிவிக்கையில், எனது பெயர் ம.பிரியதர்ஷினி. நான் மானாமதுரை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு பயின்று வருகிறேன். எங்கள் பள்ளியிலேயே ஆதார் புதுப்பித்தல் செய்து தருவது மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

இவ்வாறு, ஆதார் புதுப்பித்தலை நான் பயின்று வரும் பள்ளியிலேயே செய்து தருவதால், பள்ளிக்கு விடுப்பு எடுக்காமல் ஆதார் புதுப்பித்தல் மேற்கொள்ள ஏதுவாக உள்ளது.

அதுமட்டுமன்றி, எவ்வித கட்டணமுமின்றி ஆதார் புதுப்பித்தல் செய்யப்படுவதால், அதற்கென ஏற்படும் செலவும் இல்லை. இதுபோன்று, ஒவ்வொரு மாணவர்களுக்கும் பயனுள்ள வகையில், எண்ணற்ற திட்டங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு, கற்றலுக்கு தேவையான அனைத்து உபகரணங்களையும் வழங்கி வருகிறார்கள்.

இதுதவிர எதிர்கால திட்டங்களுக்கு அடிப்படையாகவும், உயர் கல்வி கற்பதற்கு பயனுள்ள வகையிலான திட்டங்களும் தமிழக அரசால் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அத்திட்டங்கள் வாயிலாக எங்களுக்கு கற்றலுக்கான ஆர்வமும் அதிகரிக்கிறது.

”பயிலும் பள்ளியிலேயே ஆதார் பதிவு” திட்டத்தின் கீழ் பயன்பெற்ற கல்லல் வட்டாரத்திற்குட்பட்ட கோவிலூர் ஆண்டவர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் பயின்று வரும் மாணவனின் பெற்றோர் திருமதி மோனிஷா அவர்கள் தெரிவிக்கையில், என் பெயர் மோனிஷா. எனது குழந்தை கோவிலூர் ஆண்டவர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் இரண்டாம் வகுப்பு பயின்று வருகிறான். அவனுக்கு ஆதார் கட்டாய பயோமெட்ரிக் முறை பதிவு இதுவரை மேற்கொள்ளவில்லை.

தற்போதைய காலகட்டத்தில், ஆதார் அட்டை என்பது அவசியமான ஒன்றாக அமைந்துள்ளது. அரசின் ஒவ்வொரு திட்டங்களை பெறுவதற்குமான ஆவணங்களில் ஆதார் அட்டை முக்கிய பங்கு வகிக்கிறது.

இதனை கருத்தில் கொண்டும், மாணாக்கர்களுக்கு பயனுள்ள வகையிலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இவ்வகையான திட்டத்தினை தமிழகத்தில் செயல்படுத்தியது பெருமைக்குரிய ஒன்றாகும். இதுபோன்று ஆக்கப்பூர்வமான திட்டங்களை தமிழகத்தில் அறிவித்து, சிறப்பாக செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினை அனைத்து பெற்றோர்களின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன் என மோனிஷா அவர்கள் தெரிவித்தார்.

::தொகுப்பு::
மு.ராஜசெல்வன்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சிவகங்கை மாவட்டம்.

---

# காரைக்குடி மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் ஷோரூமில் கலைநயமிக்க நகைககளின் கண்காட்சி மற்றும் விற்பனை துவக்கம்

காரைக்குடி, ஜூன், 29, கலைநயமிக்க நகைகளின் கண்காட்சி தற்போது மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் காரைக்குடி ஷோரூமில் நடைபெற்று வருகிறது.

தலைசிறந்த நகை வடிவமைப்பாளர்களால் சிறப்பாக வடிவமைக்கப் பட்டுள்ள இந்த நகைகள் ஒவ்வொன்றும் அந்த கலைஞர்களின் நிபுணத்துவத்தையும் தனிப்பட்ட திறன்களையும், அனைத்து நகைகளிலும் ஒரு கலைநயம் இருக்கிறது என்பதை நிருபிக்கும் வகையிலும் உள்ளன.

இந்த கண்காட்சியை செந்தில் குடும்பத்தினர், சண்முகம் குடும்பத்தினர், மணிவண்ணன் குடும்பத்தினர், கருப்பையா குடும்பத்தினர், பாலகுமார் குடும்பத்தினர், டாக்டர். அமலா ஸ்டாலின் ராஜா குடும்பத்தினர், நிரஞ்சனா குடும்பத்தினர், ஆகியோர் துவக்கி வைத்தனர். இவர்களுடன் முகமது அஷூர் (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் காரைக்குடி கிளை தலைவர்), கிளீன்ட் ஷாஜி (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் மேலாண்மை பயிற்சி), சுரேஷ் (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் காரைக்குடி கிளை விற்பனை மேலாளர்) முத்து முருகன் (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் காரைக்குடி கிளை துணை வர்த்தக மேலாளர்), மற்றும் கிளை ஊழியர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

கலைநயமிக்க இந்த கண்காட்சி கலைகளில் ஆர்வமுள்ளவர்களின் கண்களுக்கு விருந்தாக அமையும். இந்த கண்காட்சி ஜூன்-30-2024 ஆம் தேதி வரை நடைபெறும். இந்த கண்காட்சியில் இடம்பெற்றுள்ள நகைகளை வாடிக்கையாளர்கள் சிறப்பு விலையில் வாங்கலாம்.மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் தற்போது 13 நாடுகளில் 350-க்கும் மேற்பட்ட சில்லறை விற்பனை நிலையங்களுடன் உலகில் மிகப்பெரிய நகை விற்பனை நிறுவனமாக உருவெடுத்துள்ளது.

தமிழ்நாட்டில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோயில், சேலம், திருச்சி, ஈரோடு, வேலூர், இராமநாதபுரம், ஈரோடு, தருமபுரி, தஞ்சாவூர், கும்பகோணம், திருப்பூர், காரைக்குடி, மயிலாடுதுறை, புதுக்கோட்டை, மார்த்தாண்டம், புதுச்சேரி ஆகிய நகரங்களில் 26 கிளைகளை கொண்டுள்ளது.

---

**CHANGE OF NAME**

**I, JAN BASHA, S/o. ABDUL WAHAB, (Passport No. P8805090), residing at New No.8, Old No.48A, Anna Nagar 3rd Street, Tiruvannamalai Town and District-606 601, declare that I have changed my name from JAN BASHA shall hence forth be known and called as JOHN BASHA and changed my wife's name SABEENA shall hence forth be known and called as SHABINA vide affidavite dated 28.06.2024 sworn before Notary P.RAJA, Tiruvannamalai.**

---

**மாண்புமிகு சிறப்பு சார்பு நீதிமன்றம், தஞ்சாவூர்**

**MCOP.No.105/2020**

ரா.கவிவர்மன்
த/பெ ராஜாங்கம் ...மனுதாரர்

எதிர்

1. ரா.சிவஅண்ணாமலை
2. தி.ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், அதன் பிரதிநிதியாக மேலாளர், தஞ்சாவூர்
3. பாலு ஆட்டோஸ்
4. HDFC ERGO General Insurance Company Ltd, தஞ்சாவூர் ...எதிர்மனுதாரர்கள்

**அறிவிப்பு**

மேற்கண்ட அசல் மனுவில் 1-ம் எதிர்மனுதாரராகிய தங்களுக்கு நீதிமன்றத்தின் மூலமும் அஞ்சல் வழியாகவும் பலமுறை அறிவிப்பு அனுப்பி சர்வாகதால் மாண்புமிகு நீதிபதி அவர்களால் செய்தித்தாள் விளம்பரத்திற்கு உத்தரவாகி **22.07.2024** அன்று வழக்கு வாய்தா போடப் பட்டுள்ளது. அன்றைய தினம் தாங்கள் சிறப்பு சார்பு நீதிமன்றம், தஞ்சாவூரில் காலை 10.00 மணிக்கு நேரில் ஆஜராக வேண்டும் அல்லது தங்களது வழக்கறிஞர் மூலம் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும். அப்படி தாங்கள் செய்ய தவறினால் தங்களுக்கு எதிராக மாண்புமிகு நீதிபதி அவர்களால் ஒருதலைபட்ச உத்தரவு தங்களுக்கு எதிராக பிறப்பிக்கப்படும் என்று இவ்வறிப்பின் மூலம் தங்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**V. பாலசுப்பிரமணியன்., M.A., B.L.,
வழக்கறிஞர் & நோட்டரி பப்ளிக்,
உறுதிமொழி ஆணையர்,
தஞ்சாவூர்**

---

மாண்பமை உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பாக,

(இ).த.ப.எண்: 425/2023/ஆ2

ஜெகதீசன் த/பெ பொன்னுசாமி
எண்: 181, மேலத்தெரு,
சின்னபொன்னாப்பூர்,
தலையாமங்கலம் அஞ்சல்,
ஒரத்தநாடு வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம். ...மனுதாரர்

எதிர்

வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஒரத்தநாடு ...எதிர்மனுதாரர்

**கோட்டாட்சியர் அறிவுறுத்தலின்படி மனுதாரர் அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் தனது தாயார் **திருவம்மாள் க/பெ பொன்னுசாமி** என்பவர் கடந்த **02.11.1997**-ம் தேதி அன்று மேற்படி முகவரியில் இறந்து விட்டார். இறப்பு சான்று பெறுவதற்கு எனது தாயார் **திருவம்மாள்** இறப்பு மேற்படி எதிர்மனுதாரர் அலுவல கத்தில் பதிவு செய்ய உத்தரவிட வேண்டி தாக்கல் செய்த மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் இந்த விளம்பரம் கண்ட 30 நாட்களுக்குள் சமூகம் தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவல கத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மனு மீது ஒருதலை பட்சமாக உத்தரவு தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**ஜெகதீசன்
த/பெ பொன்னுசாமி**

---

மாண்பமை உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பாக,

(இ).த.ப.எண்: 24/2022/ஆ2

பரமசிவம் த/பெ சுந்தரப்பா
எண்: 3/87இ அசோக் நகர் 1-வது தெரு, மேலகுமரேசபுரம்,
கிருஷ்ணசமுத்திரம் பஞ்சாயத்து,
கூத்தைப்பார்,
திருச்சிராப்பள்ளி ...மனுதாரர்

எதிர்

வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
தஞ்சாவூர் ...எதிர்மனுதாரர்

**கோட்டாட்சியர் அறிவுறுத்தலின்படி மனுதாரர் அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் தனது தாயார் **பாப்பம்மாள் க/பெ சுந்தரப்பா** என்பவர் கடந்த **07.09.1995**-ம் தேதி அன்று நடுத்தெரு, குளிச்சப்பட்டு, தஞ்சாவூர் என்ற முகவரியில் இறந்து விட்டார். இறப்பு சான்று பெறுவதற்கு எனது தாயார் **பாப்பம்மாள்** இறப்பு மேற்படி எதிர்மனுதாரர் அலுவல கத்தில் பதிவு செய்ய உத்தரவிட வேண்டி தாக்கல் செய்த மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் இந்த விளம்பரம் கண்ட 30 நாட்களுக்குள் சமூகம் தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவல கத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மனு மீது ஒருதலை பட்சமாக உத்தரவு தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**பரமசிவம்
த/பெ சுந்தரப்பா**

---

**மாண்பமை மாவட்ட சிறப்பு சார்பு நீதிமன்றம், தஞ்சாவூர்**

**MCOP.No.66/2023**

சக்திவேல் (வயது 39/24)
த/பெ வீராச்சாமி
கீழத்தெரு,
நாகப்பஉடையான்பட்டி,
குருங்குளம் கிழக்கு,
தஞ்சாவூர் மாவட்டம் ...மனுதாரர்

எதிர்

சங்கய்யா
த/பெ தங்கராஜ்
எண்: 702/3, இந்திராநகர் காலனி,
வீரகனூர் அஞ்சல்,
மதுரை-625009. ...2-ம் எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி வழக்கின் மனுதாரர் கடந்த **15.07.2020**-ம் தேதியன்று **TN 64 T6141** என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனத்தில் சாலை விபத்தில் ஏற்பட்டு காயம் அடைந்தமைக்கான இழப்பீடு கேட்டு சமூகம் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர். மேற்படி மனுவில் 2-ம் எதிர்மனுதாரர் ஆகிய நீர் வருகின்ற **01.07.2024** அன்று காலை 10.00 மணி யளவில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரி வித்துக் கொள்ளலாம். தவறினால் மனுதாரருக்கு ஒருதலை பட்ச உத்தரவு பிறப்பிக்க நேரிடும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**P. விஜயகுமார்., B.A., B.L.,
வழக்கறிஞர், தஞ்சாவூர்**

---

**பெயர் மாற்றம்**

*நான், GAYATRI KRISHNAN MUDALIAR W/O. R. SUBRAMANYAM, பிறந்த தேதி - 22.11.1978, NO. 27, Eswaran Kovil street, AKA Nager, Oragadam, Ambattur, Chennai -600 053 இல் வசிக்கும் நான் இனி GAYATHRI SUBRAMANYAM என்று அழைக்கப்படுகிறேன்.*

*இப்படிக்கு
GAYATRI KRISHNAN MUDALIAR*

தினமும் காலையில் படியுங்கள்
தின குரல்
தேசிய தமிழ் நாளிதழ்
SOUTHERN Mail
National English Daily
दिन•संसार
தின் ● சன்சார்
தேசிய இந்தி நாளிதழ்
சென்னை பதிப்பு
புதுச்சேரி பதிப்பு
கடலூர் பதிப்பு